# +2 தேர்ச்சியடைந்த மாணவிகளுக்கு சிறப்பான இரண்டு ஆண்டுகள் பயிற்சி மற்றும் பயிற்சியில் தேர்வடைந்தபின் வேலை வாய்ப்பு

## பயிற்சியின் அறிமுகம்

- இந்தியாவிலேயே முதன் முதலில் கண் மருத்துவ செவிலியர் பயிற்சி அரவிந்த் கண் மருத்துவமனையில் தொடங்கி செயல்பட்டு வருகிறது.
- 43 வருடங்களாக கண் மருத்துவ செவிலியர்களுக்கு முழுமையான வேலை வாய்ப்புடன் கூடிய 2 வருட பயிற்சி அளிக்கப்படுகிறது.
- இதுவரை தோராயமாக 7000 மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- இந்த பயிற்சி வகுப்புகள் மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், தேனி, பாண்டிச்சேரி, சேலம், சென்னை, திருப்பதி ஆகிய இடங்களில் உள்ள அரவிந்த் கண் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன.

## பயிற்சி அளிக்கப்படும் துறைகள்

### மருத்துவ பதிவேட்டுத்துறை

நோயாளிகளிடம் சரியான தகவல்களை சேகரித்து வழிநடத்துதல் மற்றும் மருத்துவ பதிவேடுகளை பாதுகாத்தல்.

### வெளிநோயாளிகள் பிரிவு

வெளிநோயாளி பிரிவிற்கு வரும் நோயாளிகளுக்கு நோயின் தன்மைக்கேற்ப பரிசோதனைகளை செய்து தரமான சிகிச்சை அளிக்க உதவுதல்

### விழிஒளி ஆய்வாளர்

நோயாளிகளுக்கு தகுந்த முறையில் பார்வை பரிசோதனை செய்து உயர்தர கண் கண்ணாடிகளை பரிந்துரை செய்தல்

### உள்நோயாளிகள் பிரிவு

உள்நோயாளியாக அனுமதிக்கப்படும் நோயாளிக்கு தரமான சிகிச்சையை அளிக்க உதவுதல்

### அறுவை சிகிச்சை பிரிவு

அறுவை சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்து முழுமையான பார்வை திறனை அளிக்க உதவுதல்

### மருத்துவ ஆலோசனைப் பிரிவு

நோயாளிகளுக்கு பயத்தையும், சந்தேகங்களையும் போக்கி தேவையான பரிசோதனை மற்றும் சிகிச்சை பெற உதவுதல்

### கண்கண்ணாடிப் பிரிவு

நோயாளிகளுக்கு மருத்துவக் குறிப்பின்படி லென்ஸ் தயார்செய்து நோயாளிகளுக்கு ஏற்ற கண்ணாடி வழங்குதல்

### இல்லப்பராமரிப்புத் துறை

சுத்தம், சுகாதாரம், அமைதி மற்றும் பாதுகாப்பு நிறைந்த சூழலை மருத்துமனையில் உருவாக்குதல்.

## அடிப்படைத் தகுதிகள்

1. வயது வரம்பு 17லிருந்து 19 வரை
2. படிப்பு : +2 தேர்ச்சியடைந்த பெண்கள்
3. வேலைத்திறன் நிறைந்த பயிற்சிப் பெற ஆர்வம் மிக்க பெண்கள்

## பயிற்சிக்கு தேர்வு செய்யும் முறை

பொது அறிவுத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு

### பயிற்சிக்கான விளக்கம்

1. பயிற்சி காலம் 2 வருடங்கள்
2. முதல் வருடம் உதவித் தொகை ரூ.1400/-
3. இரண்டாம் வருட உதவித் தொகை ரூ.1600/-
4. சலுகை விலையில் ஆரோக்கியமான சுவை நிறைந்த உணவு
5. உணவு கட்டணம் மாதம் ரூ. 1200/-
6. தங்கும் இடம் இலவசம்

### பயிற்சி முறை

1. அனுபவம் மிகுந்த பயிற்றுநர்களைக் கொண்டு பாடத்திட்டத்துடன் இணைந்து செயல்முறை பயிற்சி விளக்கம்
2. தேவைக்கேற்ப மருத்துவர்கள் நடத்தும் வகுப்புகள்
3. திறனை மேம்படுத்தும் நவீன பயிற்சி முறைகள் (smart class)
4. ஒளி, ஒலி வசதிகள் அமைந்த வகுப்பறைகளில் பயிற்சி
5. துறைசார்ந்த செயல் முறைகளை மதிப்பீடு செய்து சான்றளித்தல்






6. மென் (soft skills) திறன்களை மேம்படுத்தும் பயிற்சி
7. நற்பண்புகள் மற்றும் கலாச்சாரத்தை மெருகேற்ற வாய்ப்புகள்

## பாதுகாப்பு அம்சங்கள்

1. பெண்களுக்கு ஏற்ற பாதுகாப்பான இடம்.
2. மருத்துவமனை வளாகத்திற்குள்ளேயே இயற்கை மற்றும் ஆரோக்கியமான வசதியுடன் கூடிய தங்கும் இடவசதி.

## பயிற்சியின் விவரம்

### முதல் ஆண்டு

1. முதல் 3 மாதம் அடிப்படை பயிற்சி
2. அடுத்த 9 மாதங்கள் துறை சார்ந்த பயிற்சி

### இரண்டாம் ஆண்டு

1. முதல் 6 மாதங்கள் துறை சார்ந்த பயிற்சி
2. அடுத்த 6 மாதங்கள் சிறப்பு பிரிவு பயிற்சி

## சிறப்பு படிப்புகள்

அரவிந்த் கண் மருத்துவமனையும் பிற நிறுவனங்களும் இணைந்து வழங்கும் பட்டயப்படிப்புகள்

தேர்வாகும் மாணவர்களுக்கு அரவிந்த் கண் மருத்துவமனை மொத்த செலவுகளையும் பொறுப்பேற்கும்.

### மாற்றல்

மாற்றல் என்பது ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு (நமது கிளை மருத்துவமனைகளுக்கு) பயிற்சிக்காகவும் சுயமுன்னேற்றத்திற்காகவும் அனுப்பப்படுதல்.

## வசதிகள் மற்றும் பிற திறன்களை மேம்படுத்தும் திட்டங்கள்

1. மருத்துவமனை மற்றும் தங்கும் விடுதி நூலகங்கள்
2. யோகா வகுப்புகள்
3. மருத்துவமனை துறை சார்ந்த கண்காட்சிகள்
4. விழிப்புணர்வு திரளணி
5. ஆன்மீக ரீதியான சொற்பொழிவுகள் மற்றும் பஜனைகள்

| நிறுவனங்கள் | படிப்புகள் | நடத்தப்படும் இடங்கள் |
|---|---|---|
| The Tamil Nadu Dr. MGR Medical University, Chennai (தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகம், சென்னை) | 1. விழி ஒளி ஆய்வாளர் Dip in Optometry Technology (DOT)<br>2. கண் மருத்துவ உதவியாளர் Dip in Ophthalmic Assistant (DOA) | மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தேனி |
| Government of Puducherry Board of Medical Education புதுச்சேரி அரசு மருத்துவக் கல்வி வாரியம் | 1. Dip in Optometry (DO)<br>2. Dip in Ophthalmic techniques (DOT) | புதுச்சேரி |
| Healthcare Sector Skill council Govt of India சுகாதார துறை திறன் மன்றம் | 1. OT Technician<br>2. Refractionist | மதுரை, திருநெல்வேலி |
| Bharat Sevak Samaj Govt of India பாரத் சேவக் சமாஜ் (இந்திய திட்ட ஆணைக் குழு) | 1. Lab technician<br>2. Ophthalmic Assistant | மதுரை |

6. கலை நிகழ்ச்சிகள், சிறப்பு தினக் கொண்டாட்டங்கள்
7. உடல் மற்றும் மனநலம் சார்ந்த சொற்பொழிவுகள்
8. துறைக்கேற்ற வெளிக்களங்களைப் பார்வையிடுதல்

## வேலை வாய்ப்பு

1. பயிற்சி தேர்வில் வெற்றி பெற்ற அனைவருக்கும் 100 சதவிகித வேலைவாய்ப்பு
2. 19 வயதில் சுயமாக சம்பாதிக்கும் திறன், வாழ்க்கையில் தன்னம்பிக்கை ஆகியவை கிடைப்பதற்கான அரிய வாய்ப்பு

## இதர பயன்கள்

1. PF, ESI, DA போன்ற மத்திய / மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன.
2. தகுதி மற்றும் வேலைத் திறமைக்கு ஏற்ப அவ்வப்போது கீழ்கண்டவாறு பதவி உயர்வு அளிக்கப்படும்.
3. ஆரம்ப மாதாந்திர ஊதியம் - ரூ.10,835

### 5வது வருட முடிவில்

1. பயிற்றுநர் (Tutor)
2. மேற்பார்வையாளர் (Supervisor)
3. நல்ல செயல்திறனாளர் (Performer)
4. 10 வது வருடம் துறை மேல் அதிகாரி மற்றும் மருத்துவ மேலாளர் ஆகும் தகுதி

## விண்ணப்பிக்கும் முறை

இந்த பயிற்சிக்கு விண்ணப்பிக்க, கீழ்க்கண்ட இணைப்பை கிளிக் செய்யவும்.

www.bit.ly/Tamilmlop

அருகில் உள்ள அரவிந்த் மையங்களையும் அணுகலாம்